# பஸ்கொட பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஒக்தோபர் 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 06 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பஸ்கொட பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் முற்கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 947,500 தொகையான மீதி நாட்குறிப்பு இல 1 இன் ஊடாக பேரேட்டில் முற்பணமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்பாக நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,353,304 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் (பி.ச.10) பிரகாரமான மீதி மற்றும் கணக்காய்வின் போது பிரதான காசேட்டின் பெறுவனவு, கொடுப்பனவு கணிப்பீடுகளில் பெறப்பட்ட மீதிகள் என்பவைகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு இலக்கம் | கணக்காய்வின் போது கணிப்பீடு செய்யப்பட்டு பெறப்பட்ட மீதி | பிரதான காசேட்டின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 394 | (6,950) | 46,332 | 39,382 |
| 403 | (1,657,218) | 726,850 | 930,368 |

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 29,746 தொகையாக இருந்த காசு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமல் வங்கிக் கணக்கிணக்கங்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இனங்காணப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் முற்கொடுப்பனவுகளின் கீழ் சபையின் வைப்புக்களாக ரூபா 92,810 தொகையானது இனங்காணப்படாமல் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் இல. 403,405,642,394 என்ற வங்கிக் கணக்குகளில் ரூபா 17,045 தொகையான வரவு மற்றும் ரூபா 48,240 தொகையான செலவுக் குறிப்புக்கள் கணக்குகளில் சீராக்கப்படாமல் இணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,862,843 ஆக இருந்ததுடன், உப பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,309,325 ஆக இருந்தமையால் ரூபா 446,482 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 25,691,632 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 38,205,338 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | (i) | விதி 163 | வருடாந்த வருமானப் பொழிப்பு (பி.ச.19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | விதி 180-184 | நிதி மற்றும் களஞ்சிய விடயங்கள் தொடர்பாக செயற்படும் அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பிணைப் பணம் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) | நி.பி. 485(4) | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 20,143 தொகையான |

| | | |
|---|---|---|
| | | பதவியணிக் கடனை மாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிறுவனத்தில் இருந்து தருவித்துக் கொண்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 1645-1646 | வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் முறைப் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு மாதாந்த பொழிப்புடன் அடுத்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்க வேண்டியபோதிலும் 04 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தாபன விதிக் கோவையின் அத்தியாயம் xxiv இன் 4.4, 4.5 மற்றும் 4.6 | குறிப்பிட்ட அறிவுரைகளின் பிரகாரம் இறந்த அலுவலர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 9,663 இற்கான பதவியணிக் கடன் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | திறைசேரிச் சுற்று நிருபம் | |
| | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ-2002/02 ஆம் இலக்கம் திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் | கணனிகளின் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,056,128 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,550,441 ஆக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானங்கள், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 ஆந் திகதிய எனது கடிததத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி |
|---|---|---|---|
| | 2010 | 2009 | % |
| | ரூபா 000 | ரூபா 000 | |
| ஏக்கர் வரி | 169 | 150 | 12.66 |
| ஏனைய வருமானங்கள் | 32,228 | 11,955 | 169.58 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 168,575 தொகையான நிலுவை வாடகை மற்றும் கட்டணங்கள் என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் இரண்டினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 650,009 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,195,000 தொகையும், மத்திய அரசிடமிருந்து ரூபா 92,855 தொகையும் முத்திரைக் கட்டணங்களாகக் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீடு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீட்டு** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவுகள்** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** | **ரூபா. '000** |
| ஆளுக்குரிய வேதனம் | 13,285 | 10,151 | 3,134 | 6,019 | 10,534 | (4,515) |
| ஏனையவை | 8,260 | 5,538 | 2,722 | 2,538 | 5,418 | (2,880) |
| உப கூட்டுத் தொகை | 21,545 | 15,689 | 5,856 | 8,557 | 15,952 | (7,395) |
| மூலதன செலவுகள் | 14,377 | 47,761 | (33,384) | 10,155 | 29,183 | (19,028) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 35,922 | 63,450 | (27,528) | 18,712 | 45,135 | (26,423) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

#### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஊழியர் தரம்** | **அங்கீகரிக்கப்பட்டவை** | **உள்ளபடியானவை** |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 03 | 02 |
| இரண்டாரம் தரம் | 13 | 10 |
| ஆரம்ப தரம் | 21 | 19 |
| ஏனையவை(அமைய/ தற்காலிக) | - | 17 |
| | 37 | 48 |

(ஆ) மீளாய்வாண்டின் பதவியணியினரின் சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களின் படிகள் என்பவைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 10,151,206 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 9,153,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 998,206 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 17 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 2,008,498 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இச் சுற்றுநிருப அறிவுரைகளை மீறும் வகையில் ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவருக்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதியில் 01 வருட காலத்தை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,040,310 ஆக காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 171,916 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,143 ஆகக் காணப்பட்டது.

## 2.6 கட்டிட விண்ணப்பங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் கட்டிட

விண்ணப்பங்கள் இரண்டில் ரூபா 1,110 தொகையான கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) பீஏ/2010/02 ஆம் இலக்க கட்டிட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,000 தொகையான இணக்கக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பீ/ஏ/2010/04 ஆம் இலக்க கட்டிட விண்ணப்பத்திற்காக அபிவிருத்தி அதிகாரப் பத்திரம் ஒன்று விநியோகிக்கப்பட்டிராததுடன் மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் 6(ii) ஆம் பந்தியின் பிரகாரம் 48.3 சதுர மீற்றருக்காக ரூபா 2,000 படி அறவிடப்பட வேண்டிய ரூபா 96,600 தொகையான உறுதிப்படுத்தல் அங்கீகாரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 நிர்மாண வேலைகள்**

---

மீளாய்வாண்டில் தென்மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று வீதிகளின் அபிவிருத்திக்காக சபைக்கு ரூபா 75,000 தொகைப்பணம் கிடைத்திருந்த போதிலும் 2011 நவம்பர் 21 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தம் கையொப்பமிடுவதற்கோ அல்லது வேலை ஆரம்பித்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

---

சபையில் போதிய அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்